# S.C. No. 204 / 2018

# 22.08.2022

**அ.த.சா.5, திரு. பசுபதி, த/பெ. துரைக்கண்ணு, வயது 45**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது குளப்பாக்கத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இருச்சக்கர மெக்கானிக் ஷாப் வைத்துள்ளேன். பக்கத்து கடையில் இராஜேஷ் என்பவர் இருச்சக்கர வாகனத்தை வாங்கி விற்கும் கடையை வைத்துள்ளார். ஆஜர் எதிரிகளை தெரியும். தாவா சம்பவம் சம்பந்தமாக சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்துதான் தெரியும். பக்கத்திலுள்ள இரஜேஷின் கடையின் பின் சுவற்றை இடித்ததாக சொன்னார்கள். யார் இடித்தார்கள் என்று தெரியாது. போலீஸ் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை பரிசீலிக்க அனுமதி வழங்கப்படுகிறது.**

<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது போலீஸ் விசாணையின் போது இரஜேஷிற்கும் பார்த்திபன் என்பவருக்கும் கடையை காலி செய்ய சொல்லி தகராறு இருந்தது என்றும், 12.10.2015 அன்று பார்த்தசாரதி, நீலகண்டன் மற்றும் மோகன் ஆகியோர்கள் கடப்பாரையை வைத்து இடித்துகெண்டிருந்தார்கள் என்றும், அதனை இராஜேஷ் கேட்ட போது உன்னை ஒழித்து விடுவோம் என்று மிரட்டினார்கள் என்றும், ஆஜர் எதிரிகள் லீஸ் அக்ரிமென்ட், கம்ப்யூட்டர், 2 வால் பேன்கள், ஏ.சி., 4 சேர்கள், காரின் வீல்கள் 2 செட் மற்றும் வாட்டர் பில்டர்கள் சேதமாக்கிவிட்டார்கள் என்றும், சம்பவத்தை நான் பார்த்தேன் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**